# உந்தன் பாதம் பணிந்து நான்

**1**
உந்தன் பாதம் பணிந்து நான்
வாழ வேண்டும் யேசுவே
பலியிலே கலந்திட வேண்டி
நின்றேன் தெய்வமே - ( 2 )

**2**
அன்பில் நிலைக்கும் இதயமே
ஆற்றல் மிகுந்ததே
பண்பில் உயர்ந்து வாழுமே
புதிய உறவிலே
பிறரின் நலனில் மகிழ்ந்திட
தந்தேன் என்னை உந்தன் பாதம்
என்னை நீ ஏற்றிடுவாய் - ( 2 )

**3**
மனித நேயம் மலரவே
என்னை தருகின்றேன்
உண்மை அன்பு உயர்ந்திட
உறுதி கொடுக்கிறேன்
உந்தன் ஆட்சி மலர்ந்திட
தந்தேன் என்னை உந்தன் பாதம்
என்னை நீ ஏற்றிடுவாய் - ( 2 )